தூத்துக்குடி, நீலகிரியில் சூழலியல் திட்டங்களுக்கு நிதி தேவை

தமிழக அரசின் உள்கட்டமைப்பு, மேம்பாட்டுத் திட்டங்களுக்கு உடனடி அனுமதி

மத்திய அமைச்சரிடம் அமைச்சர் தங்கம் தென்னரசு மனு

புதுடெல்லி, பிப்.13

தூத்துக்குடி, நீலகிரியில் சூழலியல் சார்ந்த புதிய திட்டங்களுக்கு தேவைப்படும் நிதியை உடனடியாக ஒதுக்க வேண்டும்.

தமிழக அரசின் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு விரைவாக அனுமதி வழங்கும்படி மத்திய அமைச்சர் பூபேந்திர யாதவிடம் அமைச்சர் தங்கம் தென்னரசு டெல்லியில் கோரிக்கை மனு அளித்தார்.

டெல்லியில் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை மந்திரி பூபேந்திர யாதவை தமிழக நிதி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சந்தித்துப் பேசினார். அப்போது, தமிழக அரசின் பல்வேறு திட்டங்களுக்கான அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு குறித்த கோரிக்கைகள் அடங்கிய மனுவை மத்திய அமைச்சரிடம் அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழக சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு உடனிருந்தார்.

அந்த கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் கடலோர மற்றும் வனச் சூழல் அமைப்புகளை மேம்படுத்துவதற்கான பசுமைக் கவசத்தை உருவாக்குவதற்கான திட்டத்திற்கு, சுற்றுச்சூழல் மாற்றம் மற்றும் பசுமை இந்தியா இயக்கத்தின் தேசிய செயல்திட்டத்தின் கீழ், ரூ.27.53 கோடி செலவில் ஏற்கனவே மத்திய அமைச்சகத்திடம் அனுமதி கோரப்பட்டு இருந்தது.

இத்திட்டம் இயற்கை சார்ந்த தீர்வுகள் மூலம் மாவட்டத்தில் பல கடலோரப் பகுதிகளில் கடல் அரிப்பை நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதுபற்றியும் இந்த சந்திப்பில் விவாதிக்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள முதுமலை புலிகள் காப்பகத்தின் இடை மண்டல பகுதியில் இருந்து தேங்குமரஹாடா கிராமத்தை இடமாற்றம் செய்வதற்கான ரூ.74.40 கோடி செலவிலான விரிவான திட்டத்தை மத்திய அமைச்சகத்திற்கு தமிழக அரசு சமர்ப்பித்து இருந்தது. அந்தப் பகுதியில் புலிகள் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும், மனிதனுக்கும் வனவிலங்குகளுக்கு இடையே அடிக்கடி ஏற்படும் மோதல்களின் ஆபத்தை கருத்தில் கொண்டும், திட்டத்திற்கு விரைந்து அனுமதி வழங்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு இருந்தது.

இந்த சந்திப்பின்போது மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் செயலாளர் தன்மய் குமார், கூடுதல் செயலாளர் ஸ்ரீ நரேஷ் பால் கங்வார் மற்றும் வனத்துறை இயக்குனர் ஜெனரல் சுஷில்குமார் அவஸ்தி ஆகியோர் உடனிருந்தனர்.

விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை

தேர்தலில் அரசியல் கட்சிகள் இலவசங்கள் குறித்து வாக்குறுதி வழங்குவதற்கு சுப்ரீம் கோர்ட் கடும் கண்டனம்

புதுடெல்லி, பிப்.13

தேர்தல்களில் அரசியல் கட்சிகள் இலவசங்கள் குறித்து வாக்குறுதி வழங்குவதற்கு சுப்ரீம் கோர்ட்டு கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது.

நகர்ப்புறங்களில் வீடற்றவர்களுக்கான தங்குமிட உரிமை குறித்த வழக்கு ஒன்றை சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதிகள் பி.ஆர்.கவாய், அகஸ்டீன் ஜார்ஜ் மசி ஆகியோரை கொண்ட அமர்வு நேற்று விசாரித்தது. அப்போது தேர்தல்களில் மக்களுக்கு இலவசங்கள் குறித்து அரசியல் கட்சிகள் வாக்குறுதி அளிப்பதற்கு நீதிபதிகள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நீதிபதிகள் கூறும்போது, 'இலவசங்கள் அளிப்பதற்கு பதிலாக மக்களை சமூகத்தின் மைய நீரோட்டத்தின் ஒரு பகுதியாக மாற்றி, தேசிய வளர்ச்சிக்கு பங்களிப்பது நல்லது. நாம் ஒரு ஒட்டுண்ணி வர்க்கத்தை உருவாக்கவில்லையா?' என கேள்வி எழுப்பினர்.

நீதிபதி கவாய் மேலும் கூறுகையில், 'இலவச ரேஷன், வேலை செய்யாமலே பணம் என தேர்தல்களுக்கு முன்னதாக அறிவிக்கப்படும் இந்த இலவசங்கள், 'பெண் சகோதரி' மற்றும் பிற திட்டங்களால், மக்கள் வேலை செய்யத்தயாராக இல்லை' என வேதனை தெரிவித்தார்.

அப்போது இந்த வழக்கில் மனுதாரர் சார்பாக ஆஜரான மூத்த வக்கீல் பிரசாந்த் பூஷன், 'வேலை இருந்தால் அதை செய்ய விரும்பாதவர்கள் நாட்டில் அரிதாகவே இருக்கிறார்கள்' என கூறினார்.

அதற்கு நீதிபதி கவாய், 'நீங்கள் ஒருபுறம் மட்டுமே பார்க்கிறீர்கள். நான் ஒரு விவசாய குடும்பத்தில் இருந்து வருகிறேன். மராட்டியத்தில் தேர்தலுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட இலவசங்கள் காரணமாக விவசாய கூலித்தொழில் செய்ய ஆட்கள் கிடைக்கவில்லை. ஆனால் இது குறித்து விவாதிக்க விரும்பவில்லை' என தெரிவித்தார்.

இந்த வழக்கில் மத்திய அரசின் அட்டார்னி ஜெனரல் வெங்கடரமணி, 'நகர்ப்புற வறுமை ஒழிப்பு திட்டத்தை இறுதி செய்யும் பணிகளில் மத்திய அரசு ஈடுபட்டு உள்ளது. இதில் நகர்ப்புற வீடற்றவர்களுக்கு தங்குமிடம் வழங்குவது உள்பட பல்வேறு பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்படும்' என்றார்.

இந்த வழக்கில் மனுதாரர்களில் ஒருவர் தனது வாதத்தில், 'வீடற்றவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாதது துரதிர்ஷ்டவசமானது. ஏனெனில் அது அரசின் முன்னுரிமை பட்டியலில் கடைசி இடத்தில் இருக்கிறது. ஏழைகளை விட செல்வந்தர்கள் மீதுதான் அரசு இரக்கம் காட்டுகிறது' எனக்கூறினார்.

இதனால் கோபமடைந்த நீதிபதி கவாய், ராம்லீலா மைதானத்தில் பேசுவது போல கோர்ட்டில் பேசாதீர்கள் என சாடினார். பின்னர் வழக்கின் அடுத்த விசாரணையை 6 வாரங்களுக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

ஆந்திராவில் ஐ.டி. துறை பெண்கள் வீட்டில் இருந்து வேலை செய்யும் திட்டம்: முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அறிவிப்பு

ஐதராபாத், பிப்.13

ஆந்திராவில் ஐ.டி. துறையில் பெண்கள் வீட்டில் இருந்தே வேலை செய்யும் திட்டத்தை அந்த மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார்.

கொரோனா பேரிடர் காலத்தில் தகவல்தொழில்நுட்ப(ஐ.டி.)துறையில் புதிய மாற்றம் கொண்டுவரப்பட்டது. உற்பத்தி பாதிக்காத வகையில் அனைத்து ஊழியர்களையும் வீட்டில் இருந்தே பணியாற்ற நிறுவனங்கள் அறிவுறுத்தின. இதன் மூலம் அலுவலக பராமரிப்பு செலவுகள் குறைக்கப்பட்டதுடன் உற்பத்தியும் பெருமளவில் இருந்ததாக பல நிறுவனங்கள் தெரிவித்தன.

தற்போது மீண்டும் தங்களின் ஊழியர்களை அலுவலகங்களில் பணி செய்யுமாறு பல ஐ.டி. நிறுவனங்கள் உத்தரவிட்ட நிலையில் ஆந்திரபிரதேச அரசு தகவல் தொழில்நுட்ப கொள்கையில் மாற்றம் செய்து புதிய திட்டங்களை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த மாநில முதல்மந்திரி சந்திரபாபு நாயுடு தனது வலைதள பக்கத்தில் கூறியிருப்பதாவது:

பெண்களின் சாதனைகளை கொண்டாடுகிறோம். அவர்களின் வளர்ச்சி மற்றும் வாய்ப்புகள் வழங்கப்படுவதில் சமமான மற்றும் முழுமையான அணுகலை வழங்குவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். கொரோனா பேரிடரின் போது பணிச்சூழலில் பெருமளவு மாற்றம் ஏற்பட்டது.

வீட்டில் இருந்து வேலை திட்டம் முக்கியத்துவம் பெற்றது. சொந்த ஊரில் இருந்து அலுவலகங்களில் பணிபுரியும் சூழலும் ஏற்படுத்தப்பட்டது. இது அதிக உற்பத்தி அளித்ததுடன் ஊழியர்களுக்கு நெகிழ்வான பணிச்சூழலை உருவாக்கியது.

எனவே பெண்களின் வேலை மற்றும் வாழ்க்கையை மேம்படுத்தவும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும் ஆந்திரபிரதேச அரசு பெண்களுக்கு குறிப்பாக 'வீட்டில் இருந்து வேலை' திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் உலகளாவிய திறன் மையங்கள் கொள்கையின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை அறிவிக்கப்பட்டு உள்ளது.

நகர அளவிலும், மண்டல அளவிலும் ஐ.டி. நிறுவனங்கள் தங்களின் அலுவலகங்களை உருவாக்க நாங்கள் சலுகை வழங்க உள்ளோம். கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகள் உருவாக்கவும் ஐ.டி. நிறுவனங்களை ஊக்குவிப்போம். அடிமட்டத்தில் இருந்து வேலைவாய்ப்புகளை உருவாக்க ஐ.டி. நிறுவனங்களை ஆதரிக்கிறோம்.

இந்த புதிய முயற்சிகள் அதிக பணியாளர்களை உருவாக்கும். குறிப்பாக பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கும் என்று நம்புகிறோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ராணிப்பேட்டையில் விளையாட்டு வளாகம் கட்டும் பணி: அமைச்சர் காந்தி நேரில் ஆய்வு

ராணிப்பேட்டை, பிப்.13

ராணிப்பேட்டையில் விளையாட்டு வளாகம் கட்டும் பணியை அமைச்சர் ஆர்.காந்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ராணிப்பேட்டை காரை கூட்ரோட்டில் உள்ள மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டப்பட உள்ளது. இந்த பணிகள் குறித்து அமைச்சர் ஆர். காந்தி நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கேட்டறிந்தார். கலெக்டர் சந்திரகலா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ஞானசேகரன், தாசில்தார் அருள்செல்வம், ஒப்பந்ததாரர் பாஸ்கர் மற்றும் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டுத்துறை அணி அமைப்பாளர் பிரேம் ஆனந்த் ஆகியோர் உடனிருந்தனர்.

MANAPPURAM HOME FINANCE LTD.

மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

முன்பு மணப்புரம் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

CIN : U65923K12010PIC039179

பதிவு அலுவலகம்: IV/470A, (பழையது) W/638A (புதியது) மணப்புரம் ஹவுஸ், வளபாடு திருச்சூர், கேரளா – 680 567

கார்ப்பரேட் அலுவலகம்: மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட், 3வது தளம், யூனிட் எண்.301–315, ஏ விங், ''கனக்கியா வால் தெரு'', அந்தேரி குர்லா சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை – 400 093, மகாராஷ்டிரா.

போன்: 022–66211000, இணையதளம் : www.manappuramhomefin.com

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்து)

கீழே கையொப்பமிட்டுள்ள மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட் ("MAHOFIN")டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் *(சட்டத்தின்) கீழும் (54 ஆப் 2002), மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 9வது விதிமுறைக்கு ஏற்பவும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்கள் மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர் மேற்குறிப்பிட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(4) *(சட்டம்) மற்றும் மேற்சொன்ன விதிகளின் விதி 9ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும் அடையாள சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு செலுத்த வேண்டிய தொகைக்கு பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர் மற்றும் உடன் கடன்தாரர் பெயர்/ கடன் கணக்கு எண்/கிளை	இது தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள ஈடுபெற்ற சொத்தின் விவரம்	அறிவிப்பு அனுப்பப்பட்ட தேதி மற்றும் செலுத்த வேண்டிய தொகை	சுவாதீன தேதி
1	கலையரசி U உமாபதி N /MHL00410015142/ காஞ்சிபுரம்	மொத்த நிலம் 2515 1/2 சதுர அடியில் 1256 சதுர அடி நிலம் மற்றும் அங்கு கட்டப்பட்டுள்ள ஆர்சிசி கட்டிடம். சர்வே எண்.213/4, புதிய சர்வே எண்.213/413, மனை எண். 53, ஸ்ரீ அபிராமி நகர், வல்லபாக்கம் கிராமம் வரலஜாபாத் தாலுகா, வலிச்சி அம்மன் திருக்கோவில் அருகில், காஞ்சிபுரம், வரலஜாபாத் அஞ்சல், காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு, பின்கோடு: 631605. எல்லைகள்: கிழக்கு: மன.எ எண். 58, மேற்கு: 24 அடி அகல சாலை, தெற்கு: 30 அடி அகல சாலை, வடக்கு: மனை எண். 54.	16-10-2024 & ரூ.798348/-	08-02-2025

தேதி : பிப்ரவரி 13, 2025
இடம் : தமிழ்நாடு

ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025

CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி 27 பிப்ரவரி, 2025 அன்று மாலை 03:00 மணிக்கு கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் இந்த ஏலத்தில் பங்கேற்கலாம்.

வ. எண்.	கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்	தந்தை/கணவன் பெயர்	முகவரி	கணக்கு துவக்க தேதி	செலுத்த வேண்டிய தொகை
1	சென்னை	101042519284	பிரஷாந்த் ஸ்ரீதர்	S/o. ஸ்ரீதர் கே ஆர்	11, மாலோனி சாலை, தியாகராய நகர், சென்னை, தமிழ்நாடு 600017	08-12-2023	316,744.93
2	சென்னை	104142511131	ஏ. சங்கர் கணேஷ்	S/o. அசரப்பா	123, 259, எம் டி எச் சாலை, வில்லிவாக்கம், திருவள்ளூர், சென்னை, தமிழ்நாடு 600049	24-09-2024	2,024,540.60
3	சென்னை	104142510829	பிரபு கே எம்	S/o. மார்க்	39, 51, 2வது தெரு டாக்டர் அம்பேத்கர் நகர், அயனாவரம், சென்னை, தமிழ்நாடு 600023	01-07-2024	205,968.64
4	சென்னை	104142511149	ராபின்சன் சிவதாசன்	S/o. சிவதாசன் கே,	எண்: 10/6, திருவள்ளுவர் தெரு, வேளச்சேரி, தண்டீஸ்வரம் தெரு, சென்னை, தமிழ்நாடு 600042	27-09-2024	212,219.10
5	சென்னை	104142511152	சார்லஸ்	S/o. தன்ராஜ்	72, வடக்கு வெள்ளி தெரு, ஸ்ரீ வலம்புரி கற்பக விநாயகர் கோவில் அருகில், செயிண்ட் தாமஸ் மவுண்ட், பாரதியார் நகர், சென்னை தமிழ்நாடு 600016	30-09-2024	78,952.90

ஏல தேதி 27 பிப்ரவரி, 2025 அன்று மாலை 03.00 மணி

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

Dalmia Bharat Refractories

டால்மியா பாரத் ரீப்ராக்டரீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : டால்மியாபுரம், கள்ளக்குடி அஞ்சல், திருச்சிராப்பள்ளி – 621651, தமிழ்நாடு.

தொலைபேசி எண். 011–2345 7100, மின்னஞ்சல் ஐடி: snccil@dalmiarf.com

இணையதளம்: www.dalmiaocl.com | CIN: L26100TN2006PLC061254

2வது அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தகவல்

பிப்ரவரி 01, 2025 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்க அறிக்கையுடன் சிறப்பு அலுவல்களை பரிவர்த்தனை செய்வதற்காக டால்மியா பாரத் ரீப்ராக்டரீஸ் லிமிடெட்டின் (நிறுவனம்/ DBRL) உறுப்பினர்களுக்கான நிதி ஆண்டு 2024–2025–க்கான 2வது அசாதாரண பொதுக் கூட்டம் ("EGM") புதன்கிழமை, மார்ச் 12, 2025 அன்று பகல் 12.00 மணிக்கு நிறுவனத்தின் பதிவு அலுவலகம்: டால்மியாபுரம், கள்ளக்குடி அஞ்சல் – 621 651, திருச்சிராப்பள்ளி மாவட்டம், தமிழ்நாடு என்ற முகவரியில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் ('எம்சிஏ') அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகள்/அறிவிப்புகள் மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) ஒழுங்குமுறைகள் 2015–ன் படி, ஜனவரி 31, 2025 அன்று, நிறுவனம்/ டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் உள்ள உறுப்பினர்களின் பதிவேட்டில் / நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் பெயர் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு அவர்களின் மின்னஞ்சல் முகவரிக்கு வருகை சீட்டு மற்றும் பதிவி படிவம் மற்றும் அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பு மின்னணு முறையில் அனுப்பப்பட்டுள்ளது. காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் மற்றும் நிறுவனத்தில் பதிவு செய்யப்படாத மின்னஞ்சல் முகவரி உள்ள உறுப்பினர்கள், நிறுவனத்தின் இணையதளத்தில் அதாவது www.dalmiaocl.com மற்றும் எங்களின் பதிவாளரும் பங்கு மாற்று முகவருமான கேபின் டெக்னாலஜிஸ் லிமிடெட்டின் ('KFiN/ RTA') இணையதளம் https://evoting.kfintech.com மற்றும் மேலும் நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பங்குச் சந்தைகளின் இணையதளங்களில், அதாவது கல்கத்தா பங்குச் சந்தை மற்றும் மெட்ரோபொலிட்டன் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டில் முறையே www.cse-india.com மற்றும் www.msei.in-ல் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 108 மற்றும் நிறுவனங்களின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014–ன் விதி 20 மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்டு வெளியிடப்படும் செபியின் பொருந்தக்கூடிய விதிகள் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015–ன் விதி 44 ஆகியவற்றுக்கு இணங்க, பிப்ரவரி 01, 2025 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களின் மீதும் நிறுவனத்தின் ஆர்டிஏ மூலம் மின்னணு முறையில் வாக்களிக்க அனைத்து உறுப்பினர்களுக்கும் தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதி/இன்ஸ்டாபோல் அல்லது அசாதாரண பொதுக் கூட்டத்தில் வாக்களிக்கும் வசதியை வழங்குவதில் நிறுவனம் மகிழ்ச்சியடைகிறது.

வாக்களிக்கும் வசதியின் விவரங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

1. அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பை மின்னணு முறையில் அனுப்பும் பணி நிறைவுபெற்ற தேதி : பிப்ரவரி 12, 2025.
2. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொடங்கும் தேதி மற்றும் நேரம்: சனிக்கிழமை, மார்ச் 08, 2025 காலை 9:00 மணி (இந்திய நேரப்படி)
3. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முடியும் தேதி மற்றும் நேரம்: செவ்வாய்க்கிழமை, மார்ச் 11, 2025 மாலை 5:00 மணி (இந்திய நேரப்படி)
4. பங்குதாரர்களின் வாக்களிப்பு கணக்கிடப்படும் கட்ஆஃப் தேதி: புதன்கிழமை, மார்ச் 05, 2025
   அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு, அதாவது கட்ஆஃப் தேதியான மார்ச் 05, 2025 அன்று அல்லது அதற்கு முன்னதாக ஒருவர் நிறுவனத்தின் பங்குதாரராக மாறினால், அந்த பங்குதாரர் மின்னஞ்சல் முகவரி மூலம் ஆர்டிஏ–ன் மின்னஞ்சல் முகவரி : einward.ris@kfintech.com–க்கு கோரிக்கை அனுப்பி அல்லது 040-67162222 என்ற எண்ணை தொடர்பு கொண்டு உள்நுழைவு முகவரி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம்.
5. மின்னணு முறையில் தொலைதூர மின்னணு வாக்களிப்பு மார்ச் 11, 2025 அன்று மாலை 5:00 மணிக்கு (இந்திய நேரப்படி) மேல் அனுமதிக்கப்படாது. தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதி மூலம் வாக்களித்த பங்குதாரர்கள் அசாதாரண பொதுக் கூட்டத்தில் பங்கேற்கலாம் ஆனால் அசாதாரண பொதுக் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்க முடியாத பங்குதாரர், இன்ஸ்டாபோல் அல்லது அசாதாரண பொதுக் கூட்டத்தில் வாக்களிக்கலாம். கட்ஆஃப் தேதியின்படி உறுப்பினர்கள் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் வழங்கப்பட்ட நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பட்டியலில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள பங்குதாரர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்களிப்பு அல்லது அசாதாரண பொதுக் கூட்டத்தில் வாக்களிக்கும் வசதியைப் பெற தகுதியுடையவர்கள்.
6. ஒரு தீர்மானத்தின் மீது ஒருமுறை வாக்களித்த பங்குதாரர் அதைத் தொடர்ந்து மாற்றவோ அல்லது மீண்டும் வாக்களிக்கவோ அனுமதிக்கப்பட மாட்டார்.
7. அசாதாரண பொதுக் கூட்ட அறிவிப்பு தொலைதூர மின்னணு வாக்களிப்புக்கான நடைமுறையுடன், அனைத்து பங்குதாரர்களுக்கும் மின்னணு முறையில் அனுப்பப்பட்டுள்ளது மற்றும் இது நிறுவனத்தின் இணையதளமான www.dalmiaocl.com மற்றும் ஆர்டிஏ இணையதளமான https://evoting.kfintech.com ஆகியவற்றிலும் கிடைக்கிறது.
8. நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 91 மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்டு வெளியிடப்படும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் ஆகியவற்றுக்கு இணங்க, அசாதாரண பொதுக் கூட்டத்தையொட்டி, உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் திங்கட்கிழமை, மார்ச் 10, 2025 முதல் புதன்கிழமை, மார்ச் 12, 2025 வரை (இரண்டு நாட்களையும் உள்ளடக்கியது) வரை மூடப்பட்டிருக்கும்.
9. நிறுவனத்தில் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள், மின்னஞ்சல் முகவரியை வழங்கும் கையொப்பமிடப்பட்ட கோரிக்கை கடிதத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகலுடன் மொபைல் எண், சுய சான்றளிக்கப்பட்ட பான் நகல் மற்றும் எலக்ட்ரானிக் ஃபோலியோவாக இருந்தால் கிளையண்ட் மாஸ்டர் நகல் மற்றும் தேவையான புதுப்பிப்புகளுக்கு காகித ஃபோலியோவாக இருந்தால் பங்குச் சான்றிதழின் நகல் ஆகியவற்றை einward.ris@kfintech.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் அவர்களின் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யலாம்.
10. தொலைதூர மின்னணு வாக்களிப்பு, இன்ஸ்டாபோல் மூலம் அசாதாரண பொதுக் கூட்டத்தில் வாக்களிப்பு செயல்முறை ஆகியவற்றை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்யும் ஆய்வாளராக திரு. வெங்கடசுப்ரமணியன் ராமச்சந்திரன், நிறுவனச் செயலாளர் பிராக்டிஸ் அவர்களை நிறுவனம் நியமித்துள்ளது.

மின்னணு வாக்களிப்பு தொடர்பான மேலும் கேள்விகள்/குறைகளுக்கு, https://evoting.kfintech.com–ல் கிடைக்கும் பங்குதாரர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் மின்னணு வாக்களிப்பு பயனர் கையேட்டைப் பார்க்கவும் அல்லது மெச்ர்ஸ் கேபின் டெக்னாலஜிஸ் லிமிடெட்டை, தொலைபேசி எண். 1–800–309–4001–ல் (கட்டணமில்லாதது) தொடர்பு கொள்ளலாம் அல்லது திருமதி. செல்வி சர்மா, நிறுவன செயலாளர், 4, சிந்தியா ஹவுஸ், கன்னாட் பிளேஸ், புதுடெல்லி – 110001, தொலைபேசி எண். 011–23457114 , மின்னஞ்சல் முகவரி: sncci@dalmiarf.com–ல் தொடர்பு கொள்ளலாம்.

இயக்குனர்கள் குழு சார்பாக
டால்மியா பாரத் ரீப்ராக்டரீஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
சௌமியா சர்மா
நிறுவனச் செயலாளர்
உறுப்பினர் எண் – A60934

இடம் : புதுடெல்லி
தேதி : பிப்ரவரி 12, 2025

நிறுவனங்கள் (இணைத்தல்) விதிகள், 2014

படிவம் எண். INC 26

(நிறுவனங்கள் (இணைத்தல்) விதிகள், 2014ன் விதி 30ன் கீழ்)

நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவதற்கான பத்திரிக்கையில் வெளியிடப்படும் விளம்பரம்

மத்திய அரசு அமைச்சகம் முன்பாக கார்ப்பரேட் விவகாரங்களுக்கான பிராந்திய இயக்குனர், தென் பிராந்தியம்

நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 13 துணை பிரிவு (4) மற்றும் நிறுவனங்கள் (இணைத்தல்) விதிகள் 2014, விதி 30 துணை விதி (5) பிரிவு (a) ன் விஷயத்தில்

மற்றும்

அகிரா கன்சல்டன்சி பிரைவேட் லிமிடெட்

விஷயத்தில், பதிவு அலுவலகம் : எண்.44, முகமது ஹுசைன் காலனி கொளத்தூர், சென்னை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா, 600099 ...மனுதாரர்

பிப்ரவரி 12, 2025 புதன